DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 3/2022 |
| Deposition of Witness for | : | PW. 3 |
| Name | : | **மலைராஜன்** |
| Father's Name | : | ஆதிமூலம் |
| Village | : | கலியாந்துார் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 50/2024 |

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.12.2024

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கலியாந்துாரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தினேஷ்வரன் எனது அண்ணன் மகன். காயம்பட்ட அ.சா.2 சேங்கைசாமி எனது உடன்பிறந்த அண்ணன். சாட்சிகள் அபினேஷ்குமார். அஜித் ஆகியோரை தெரியும். வழக்கின் எதிரி எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 17.02.2021ம் தேதி காலை 7.15 மணியளவில் நான் டீ சாப்பிடுவதற்காக எங்கள் ஊரில் பஸ்ஸ்டாப் அருகில் உள்ள டீக்கடைக்கு சென்றேன். நான் கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஊரணி தென்புற படிக்கட்டு ஓரமாக சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது எனது அண்ணனும் திவாகர் என்பவரும்

பேசிக்கொண்டிருந்தார்கள். நான் எதார்த்தமாக பேசிக்கொண்டிருக்கிறார் என்று சென்றுவிட்டேன். மீண்டும் சத்தம் கேட்டு நான் சென்றபோது எதிரி முத்துக்குமார் எனது அண்ணனை அருவாளால் ஊரணி தென்புற படிக்கட்டு ஓரமாக வைத்து எனது அண்ணனின் தலை, வலது மணிக்கை, வலதுபுற புஜம் ஆகிய இடங்களில் வெட்டினார். நான் எனது அண்ணனை வெட்டியபோது சென்றால் எதிரி என்னையும் வெட்டுவார் என்று நான் விலகி நின்றேன். அதன்பிறகு மீண்டும் எதிரி எனது அண்ணனை அருவாளால் வெட்டினார். உடனே எனது அண்ணன் வெட்டுப்பட்டு அந்த இடத்திலிருந்து ஓடினார். அதன்பிறகு நான் கழுத்தில் போட்டிருந்த துண்டை எனது அண்ணனின் வலது பக்க கையை கட்டினேன். அதன்பி றகு அந்த வழியாக வந்த ஆட்டோவில் எனது அண்ணனை நானும் திவாகர் என்பவரும் ஏற்றி திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அதன்பிறகு என் அண்ணன் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.17 10:14:24 +0000

Chief Judicial Magistrate,\

Sivagangai.